4. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்.

அ. சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்

180. 1978 ஆம் ஆண்டு பேரறிஞர் அண்ணா தொழில் நுட்பக் பல்கலைக் கழகச் சட்டம் செயலுக்கு வரும் நாளினை நிர்ணயிப்பது குறித்து கல்வித் துறையின் 23-8-1978 ஆம் தேதியிடப் பெற்ற அரசாணை எண். 1573ல் வெளியான அறிவிப்பு [1978 ஆம் ஆண்டு பேரறிஞர் அண்ணா தொழில் நுட்பப் பல்கலைக் கழகச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 30/1978) 43 (2)-வது பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

181. சென்னையிலுள்ள பேரறிஞர் அண்ணா தொழில் நுட்பப் பல்கலைக் கழகத்தின் பல்கலைக் கழக ஆட்சிக் குழு செயல்படத் தொடங்கும் நாளினை நிர்ணயிப்பது குறித்து கல்வித் துறையின் 5-1-1979 ஆம் தேதியிடப் பெற்ற அரசாணை எண். 30-ல் வெளியாள அறிவிப்பு [1978 ஆம் ஆண்டு பேரறிஞர் அண்ணா தொழில் நுட்பப் பல்கலைக் கழகச் சட்டத்தின் (தமிழ் நாடு சட்டம் 30/1978) 43(2) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

182. சென்னையிலுள்ள பேரறிஞர் அண்ணா தொழில் நுட்பப் பல்கலைக் கழகத்தின் நிதிக்குழு செயல்படத் தொடங்கும் நாளினை நிர்ணயிப்பது குறித்து கல்வித் துறையின் 16-2-1979 ஆம் தேதியிடப் பெற்ற அரசாணை எண். 252-ல் வெளியான அறிவிப்பு [1978 ஆம் ஆண்டு பேரறிஞர் அண்ணா தொழில் நுட்ப பல்கலைக் கழகச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 30/ 1978) 43(2)- வது பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது.]

183. அரிசனங்கள், பழங்குடியினருக்கு ஆசிரியர் பணியில் இட ஒதுக்கீடு செய்வது தொடர்பாக தமிழ்நாடு 1974 ஆம் ஆண்டு அங்கீகரிக்கப்பட்ட தனியார் பள்ளிகள் (ஒழுங்கு படுத்துதல்) விதிகளில் திருத்தமொன்று செய்வது குறித்து கல்வித் துறையின் 21-10-1978 ஆம் தேதியிடப் பெற்ற அரசாணை எண். 1896 ல் வெளியான அறிவிப்பு [தமிழ்நாடு 1973 ஆம் ஆண்டு அங்கீகரிக்கப்பட்ட தனியார் பள்ளிகள் (ஒழுங்குபடுத்துதல்) சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 29/1974) 57(2)-வது பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது.]

184. தமிழ்நாடு மாநிலத்திலுள்ள மின் நிறுவனங்கள் மாநில, மத்திய அரசுத் துறைகள் மற்றும் இந்திய இரயில் வேக்கு விற்கப்படும் மின்சார சாமான்களுக்காக செலுத்தப் பெற வேண்டிய வரி கட்டண வீதத்தை குறைப்பது குறித்து வணிக வரிகள்-அறக்கட்டளைகள் துறையின் 8-9-1979 ஆம் தேதியிடப் பெற்ற குறிப்பாணை எண். 45528 II-2/78-6ல்

1979 நவம்பர் 6]

வெளியான அறிவிப்பு [தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53(5) வது பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது.]

185. தமிழ்நாடு 1951 ஆம் ஆண்டு பண்டகசாலைச் சட்டத்தின் விவர அட்டவணையில் சில பொருள்களைச் சேர்ப்பது தொடர்பான விதிகளைச் செய்வது குறித்து உணவுத் துறையின் 4-8-1979 ஆம் தேதியிடப் பெற்ற அரசாணை எண். 206ல் வெளியான அறிவிப்பு [தமிழ்நாடு 1951 ஆம் ஆண்டு பண்டகாசாலைச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 15/1951) 27(4) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

186. தமிழ்நாடு 1967 ஆம் ஆண்டு எடை, அளவுகள் (செயற் படுத்தல்) விதிகளில் திருத்தமொன்று செய்வது குறித்து தொழிலாளர்-வேலைவாய்ப்புத் துறையின் 16-6-1979 ஆம் தேதி யிடப் பெற்ற அரசாணை எண். 993ல் வெளியான அறிவிப்பு [தமிழ்நாடு 1958 ஆம் ஆண்டு எடை அளவைகள் (செயற் படுத்தல்) சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 20/1958) 43 (4)வது பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது.]

ஆ. அறிக்கைகள், அறிவிப்புகள், ஏனைய தாள்கள்.

---

41. பேரவை விதிகள் குழுவின் அறிக்கை 1967 மற்றும் பேரவை விதிகள் குழுவினால் ஒப்புதல் அளிக்கப்பெற்ற தமிழ் நாடு சட்டமன்றல பேரவை விதிகளின் தமிழாக்கம்.

42. தமிழ்நாடு சிறை சீர்திருத்தக் குழுவின் 1978–79-ஆம் ஆண்டிற்கான அறிக்கை (பாகம் I, II, III) (தமிழ்).

43. 27-8-1969–ஆம் தேதியன்று தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் நிறைவேறிய தீர்மானத்திற்கிணங்க 31-3-1978-ஆம் தேதியன்று உள்ளவாறு கீழ்க்கண்ட சட்டமன்றப் பேரவை உறுப்பினர்களின் சொத்திருப்பு பற்றிய விவரக் கணக்குகள் பேரவைமுன் வைக்கப்பெற்றன.

1. மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட்.
2. திரு. எம். ஆர். கோவேந்தன்.